# BSNL ஊழியர் சங்கம்
# தமிழ் மாநிலம்

**சுற்றறிக்கை எண்:71** **தேதி:-30.10.2015**

## மத்திய சங்க செய்திகள்

அன்பார்ந்த தோழர்களே,

**BSNL வருவாயை உயர்த்த வியாபார நடவடிக்கைகளை வேகமாக செய்க:-** FORUMன் தொடர்ந்த தலையீடுகள் மற்றும் BSNL நிர்வாகத்தின் முயற்சிகள் காரணமாக நிறுவனத்தின் செயல்பாடுகளில் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது. உதாரணமாக செப்டம்பர் மாதத்தில் MNP மூலமாக மட்டும் ஒரு லட்சம் மொபைல் சந்தாதாரர்களை BSNL பெற்றுள்ளது. இது பெரிய சாதனையாகும். அதே போல தரைவழி தொலைபேசியின் எதிர்மறை வளர்ச்சியும் வெறும் 0.3% மட்டுமே எனக் குறைந்துள்ளது. இன்னமும் சற்று கூடுதல் முயற்சி மேற்கொண்டோம் என்றால் தரை வழி தொலைபேசியிலும் வளர்ச்சியை காட்ட முடியும். எனவே நமது மத்திய சங்கம் மாநில/மாவட்ட/கிளை சங்கங்களை மொபைல் மற்றும் தரைவழி சேவைகளின் வியாபார நடவடிக்கைகளை கூடுதலாக்க கேட்டுக் கொண்டுள்ளது. இந்த வியாபார நடவடிக்கைகள் தொடர்பான செய்திகளை மாநில/மத்திய சங்கங்களுக்கு புகைப்படங்கள் மற்றும் தகவல்களுடன் தெரியப்படுத்தவும்.

**BSNLMRS கமிட்டி:-** 14.05.2015 அன்று நடைபெற்ற 32ஆவது தேசிய கவுன்சில் கூட்டத்தில் BSNLMRS திட்டத்தை மறு பரிசீலனை செய்ய ஒரு குழு அமைக்க வேண்டும் என ஊழியர் தரப்பில் கேட்டுக் கொள்ளப்பட்டது. நிர்வாகம் அதனை ஏற்றுக் கொண்ட போதும் கார்ப்பரேட் அலுவலகத்தில் உள்ள நிர்வாக பிரிவு தேவையற்ற நிபந்தனைகளை திணித்தது. டெல்லியில் உள்ளவர்கள் மட்டுமே அந்தக் கமிட்டிக்கு நியமனம் செய்ய வேண்டும் மற்றும் அந்த கூட்டத்தில் கலந்துக் கொள்பவர்களுக்கு போக்கு வரத்துப் படி மற்றும் தினப்படி வழங்கப் படமாட்டாது என்பதே அவை. இந்த தேவையற்ற நிபந்தனைகளை BSNL ஊழியர் சங்கம் கடுமையாக எதிர்த்தது. மனித வள இயக்குனரிடம் இந்த பிரச்சனையை கொண்டு சென்ற போது அதனை அவர் ஏற்றுக் கொண்டார். அவரது உத்தரவின் பேரில் எந்த விதமான நிபந்தனைகளும் இல்லாமல் நிர்வாக பிரிவு தற்போது இரண்டு அங்கீகரிக்கப்பட்ட சங்கங்களிடம் இருந்தும் அதற்கான முன்மொழிவை கேட்டுள்ளது.

**இடைக்கால PLI உடனடியாக வழங்கு:-** BSNLEU பொது செயலாளர் தோழர் P.அபிமன்யு மற்றும் துணை பொது செயலாளர் தோழர் ஸ்வபன் சக்கரவர்த்தி ஆகியோர் 27.10.2015 அன்று BSNL CMD திரு அனுபம் ஸ்ரீவஸ்தவா அவர்களை நேரடியாக சந்தித்து ஊழியர்களுக்கு இடைக்கால PLI வழங்க வேண்டும் என வலியுறுத்தியுள்ளனர். BSNLன் வருவாய், மொபைல் மற்றும் தரைவழி தொலைபேசி இணைப்புகள் அனைத்தும் உயர்ந்துள்ளதை தொழிற்சங்க தலைவர்கள் சுட்டிக் காட்டினர். மேலும், இடைக்கால PLI வழஙகுவதனால் ஊழியர்களின் உற்சாகம் கூடும். அது நமது நிறுவனத்தை நஷ்டத்தில் இருந்து வெளிக் கொணரும் என வாதிட்டுள்ளனர்.

**JTO பயிற்சியாளர்களுக்கு TA முன்பணம் வழங்கு:-** 2013ஆம் ஆண்டு நடைபெற்ற JTO தேர்வு முடிவுகள் தமிழகத்தில் சமீபத்தில் வெளியாகி உள்ளது. மேலும் TTA தேர்வு முடிவுகளும் வெளியாகியுள்ளது. தேர்வில் வெற்றி பெற்றவர்கள் தற்போது பயிற்சிக்கு சென்றுள்ளனர். கார்ப்பரேட் அலுவலகம் நிதி வழங்காத காரணத்தால் அவர்களுக்கு TA ADVANCE கிடைக்க

வில்லை. BSNL ஊழியர் சங்கத்தின் பொது செயலாளர் தோழர் P.அபிமன்யு கார்ப்பரேட் அலுவலகத்தில் உள்ள GM(T&BFCI) திரு யஷ்வந்த் நாராயன் சிங் அவர்களை 26.10.2015 அன்று சந்தித்து இது தொடர்பாக விவாதித்தார். தமிழ் மாநிலத்திற்கு தேவையான நிதியினை ஒதுக்க உறுதி அளித்துள்ளார். தமிழ் மாநில சங்கமும் இது தொடர்பாக நமது PGM(Fin) திரு ரவி அவர்களை சந்தித்து பேசியுள்ளது. அவரும் இது தொடர்பாக தொடர்ந்து கவனிப்பதாக உறுதி அளித்துள்ளார்.

**கேடர்களின் பெயர் மாற்றம்:-** கேடர்களின் பெயர் மாற்றத்தில் ஏற்பட்ட உடன்பாட்டை அமுலாக்குவதில் உள்ள கால தாமதத்திற்கு தனது கடுமையான ஆட்சேபனையை நமது பொது செயலாளர் தோழர் P.அபிமன்யு GM(RESTT) திரு A.M.குப்தா அவர்களை 26.10.2015 அன்று சந்தித்து தெரிவித்துள்ளார். TTA க்களுக்கு JUNIOR ENGINEER என்கின்ற பெயரை ஏற்றுக் கொண்டால் அனாமலி உருவாகும் என BSNLன் MANAGEMENT COMMITTEE கருதுவதாக அவர் தெரிவித்தார். அதனால் அனாமலி உருவாகாது என பல்வேறு விவரங்களுடன் எடுத்துரைத்த நமது பொது செயலாளர், TTA க்களுக்கு JUNIOR ENGINEER என்கின்ற பெயரை வழங்குவதற்கு தேவையான விவரங்களை நிர்வாகத்திற்கு தருவதாக உறுதி அளித்துள்ளார்.

**ஒப்பந்த ஊழியர் பிரச்சனையில் கார்ப்பரேட் அலுவலகம்:-** ஒப்பந்த ஊழியர்களின் பிரச்சனைகளை பேசக் கூட மாட்டோம் என சில குட்டி அதிகாரிகள் சொல்லி வருகிற இந்த சமயத்தில், ஒப்பந்த ஊழியர்களுக்கு வேலை வாய்ப்பு அட்டை, EPF அட்டை மற்றும் ESI அட்டைகள் வழங்குவதை உறுதி செய்ய வேண்டும் என அனைத்து தலைமை பொது மேலாளர்களுக்கும் 28.10.2015 அன்று ஒரு கடிதத்தை கார்ப்பரேட் அலுவலகம் எழுதியுள்ளது. மேலும் அதே தேதியில் வெளியிட்டுள்ள மற்றொரு கடிதத்தில் ஒப்பந்த ஊழியர்களுக்கு காசோலை அல்லது ONLINE மூலமாகவே ஊதியம் வழங்கப்பட வேண்டுமே ஒழிய பணப்பட்டுவாடா செய்யக்கூடாது என்பதை உறுதி செய்ய வேண்டும் என்றும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

01.10.2015 முதல் பஞ்சப்படியை உயர்த்தி மத்திய தொழிலாளர் நல ஆணையர் வெளியிட்டுள்ள உத்தரவினை அமுல்படுத்தும் படி கார்ப்பரேட் அலுவலகம் 20.10.2015 அன்று உத்தரவிட்டுள்ளது.

**பணியில் இருக்கும் போது விபத்தில் இருந்தவரின் குடும்பத்தாருக்கு பரிவு அடிப்படையிலான பணி வழங்க வேண்டும்:-** 16.10.2015 அன்று நடைபெற்ற தேசிய கவுன்சில் கூட்டத்தில் நடைபெற்ற விவாதத்தை தொடர்ந்து 29.10.2015 அன்று மனிதவள இயக்குனர் திருமிகு சுஜாதாரே அவர்களோடு இந்த பிரச்சனையை BSNL ஊழியர் சங்கத்தின் பொது செயலாளர் தோழர் P.அபிமன்யு அவர்கள் விவாதித்தார். குஜராத் மாநிலத்தில் பணியில் இருந்த போது உயிரிழந்த இரண்டு தோழர்களின் பிரச்சனைகளை பற்றி விவாதித்தார். இந்த பிரச்சனைகளில் தேவையானவற்றை செய்வதாக மனிதவள இயக்குனர் உறுதி அளித்துள்ளார்.

**கேரள மாநிலத்தில் தொடரும் காட்டு தர்பார்:-** கேரள மாநில நிர்வாகத்தால் BSNL ஊழியர் சங்கத்தின் கேரள மாநில செயலாளர் தோழர் K.மோகனன் தற்போது காசர்கோட்டிற்கு இடமாற்றல் செய்யப்பட்டுள்ளார். முதன்மை அங்கீகரிக்கப்பட்ட சங்கத்தின் மாநில செயலருக்கு மாற்றலில் IMMUNITY உள்ளதென்று கார்ப்பரேட் அலுவலக உத்தரவு உள்ளது. எனவே கேரள மாநில நிர்வாகத்தின் உத்தரவு தன்னிச்சையானது மட்டுமின்றி பழிவாங்கும் நடவடிக்கையாகும். இதனை ரத்து செய்ய வேண்டும் என நமது மத்திய சங்கம் மனிதவள இயக்குனருக்கு கடிதம் எழுதியுள்ளது.

இது மட்டுமல்லாது BSNLEU மற்றும் SNEA தலைவர்கள் மீது தொடரப்பட்டுள்ள பழி வாங்குதல்களை ரத்து செய்ய வேண்டும் என தோழர் P.அபிமன்யு, GS BSNLEU, DGS தோழர்

ஸ்வபன் சக்கரவர்த்தி, தோழர் G.L.ஜோகி Chairman SNEA, தோழர் K.செபாஸ்டியன் GS SNEA மற்றும் இரு சங்க தலைவர்களும் நேரடியாக மனித வள இயக்குனரை 28.10.2015 அன்று சந்தித்து இணைந்த கடிதம் ஒன்று கொடுத்து வற்புறுத்தியுள்ளனர். இதனை பொறுமையாக கேட்ட மனித வள இயக்குனர் இது தொடர்பாக உறுதியான நடவடிக்கைகளை மேற்கொள்வதாக உறுதி அளித்தார்.

இதன் அடிப்படையில் தலைவர்கள் மீதான பணியிடை நீக்கங்களையும், மாற்றல் உத்தரவுகளையும் ரத்து செய்யும் படி கேரள மாநில தலைமை பொது மேலாளருக்கு கார்ப்பரேட் அலுவலகம் உத்தரவு பிறப்பித்துள்ளது.

**டாக்டர் அப்துல் கலாம் பற்றி வித்தியாசமான கருத்து தெரிவித்தவருக்கு பரிசு:-** மறைந்த ஜனாதிபதி டாக்டர் அப்துல் கலாம் பற்றி ஒரு வித்தியாசமான கருத்து தெரிவித்த மத்திய சுற்றுலா மற்றும் கலாச்சார துறை அமைச்சர் மகேஷ் சர்மா அவர்களுக்கு தற்போது பரிசளிக்கப்பட்டுள்ளது. டாக்டர் அப்துல் கலாம் அவர்கள் ஓய்வு பெற்ற பின்னர் வாழ்ந்து வந்த பங்களா தற்போது அவருக்கு ஒதுக்கப்பட்டுள்ளது. இது மத்திய அமைச்சர்களுக்கு வழ்ங்கப்படுவதைக் காட்டிலும் பெரியது. “இஸ்லாமியராக இருந்த போதும், டாக்டர் அப்துல் கலாம் ஒரு தேசிய உணர்வு மிக்க, மனிதாபிமானமிக்க ஒரு பெருந்தலைவர்” என்று அவர் முன்னர் கூறியிருந்தார். அவருடைய அறிக்கை, இஸ்லாமியர்கள் தேசிய உணர்வும், மனிதாபிமானமும் இல்லாதவர்கள் என்ற அர்த்தத்தில் உள்ளது. நிச்சயமாக இந்த அறிக்கை தேசஒற்றுமைக்கு எதிரானது. எனினும் இத்தகைய விஷமத்தனமான அறிக்கைக்கு பரிசாக அவருக்கு ஒரு பெரிய பங்களா ஒதுக்கப்பட்டுள்ளது. பாஜக அரசாங்கம் எவ்வாறு தேச ஒற்றுமையை உயர்த்திப் பிடிக்கிறது என்பதற்கு இது ஒரு உதாரணம் ஆகும்.

**பசுவுடன் கூடிய காங்கிரஸ் தான் பாஜக:-** தேசிய ஜனநாய கூட்டணி அரசாங்கத்தின் கொள்கைகள், பசுவுடன் கூடிய காங்கிரஸின் கொள்கைகள் தானே தவிர வேறொன்றுமில்லை. இது வாஜ்பாய் அரசாங்கத்தில் தொலை தொடர்பு மற்றும் பங்கு விற்பனைத் துறை அமைச்சராக இருந்த திரு அருண் ஷோரி அவர்களின் வார்த்தைகள் தானே தவிர வேறொன்றுமில்லை.

**மாட்டுக் கறி உண்பதை புராதான ஆயுர்வேதத்தின் மூலவர் சரகா பரிந்துரைத்துள்ளார்:P.M.பார்கவா:-** புராதான ஆயுர்வேதத்தின் மூலவர் எனப்படும் சரகா மாட்டுக் கறி உண்பதின் பலன்களை தெரிவித்துள்ளார். பல்வேறு உடல் உபாதைகள் உள்ள மக்களுக்கு அவர் மாட்டுக்கறி உண்ண பரிந்துரைத்துள்ளார் என பிரபல விஞ்ஞானி P.M.பார்கவா தெரிவித்துள்ளார்.

மத்திய அரசாங்கத்தின் சகிப்புத் தன்மையின்மை மற்றும் கேள்வி கேட்பவர்கள் மற்றும் அறிவியலின் மீதான தாக்குதல்களை கண்டித்து திரு P.M.பார்கவா அவர்கள் தனக்கு வழங்கப்பட்ட பத்ம பூஷன் பட்டத்தை திருப்பிக் கொடுத்துள்ளார். அவர் CELLULAR AND MOLECULAR BIOLOGY மையத்தின் ஸ்தாபகர் என்பதோடு, தேசிய அறிவுசார் கமிஷனின் முன்னாள் துணைத் தலைவருமாவார். மாட்டிறைச்சி உண்பவர்களுக்கு எதிரான தாக்குதல்களை அவர் சகிப்புத்தன்மை இன்மைக்கு எடுத்துக் காட்டாக தெரிவித்துள்ளார். அவர் மதத்தை அரசியலில் கலக்கக்கூடாது என்றும் தெரிவித்துள்ளார்.

**வெறுப்பினால் நடைபெறும் குற்றங்கள் மீது நீதிமன்றங்கள் கடுமையாக இருக்கும்-தலைமை நீதிபதி:-** நமது நாட்டில் சட்டத்திற்கு புறம்பான விஷயங்கள் அதிகரித்து வருகிறது. மதத்தின் பெயரால் வெறுப்புகள் பரப்பப்படுகின்றது. நாட்டில் வெறுப்பினால் ஏற்படும் குற்றங்கள் அதிகரித்து வருகின்றன. இந்தக் குற்றங்களை கடுமையாக பார்க்கும் என தலைமை நீதிபதி திரு H.L.தத்து எச்சரித்துள்ளார். மத அடிப்படைவாதிகளால் M.M.கல்புர்கி போன்ற அறிவாளிகள் கொலை செய்யப்படுவதற்கு எதிர்ப்பு தெரிவித்து சாகித்ய அகாடமி விருது பெற்றவர்கள்

தங்களின் விருதுகளை திருப்பிக் கொடுத்து வரும் சூழ்நிலையில் இந்த அறிவிப்பு வெளியாகியுள்ளது. “இந்திய நாட்டில் சட்டத்தின் ஆட்சி நடைபெற்று வருகின்றது. அது அதீத முக்கியத்துவம் வாய்ந்தது. சட்டத்தின் ஆட்சி நடைபெறுவதை உயர்த்திப் பிடிக்க அனைத்து முயற்சிகளையும் நீதிமன்றங்கள் செய்யும். வெறுப்பினால் ஏற்படுக் குற்றங்களை செய்பவர்கள் மீது நீதிமன்றங்கள் கடுமையான நடவடிக்கை எடுக்கும்” என இந்திய தலைமை நீதிபதி தெரிவித்துள்ளார்.

**வேற்றுமை இந்தியாவின் அழகு-** பிரதமர் நரேந்திர மோடி:- “இந்தியா வேற்றுமைகள் நிறைந்த நாடு. அது பல்வேறு பிரிவுகள், மதங்கள், மொழிகள் மற்றும் சாதிகளை கொண்டது. இந்த வேற்றுமை நமது அழகு” என சமீபத்திய தனது ‘மன் கி பாத்’ என்கிற வானொலியில் பேசும் நிகழ்ச்சியின் போது பாரத பிரதமர் நரேந்திர மோடி தெரிவித்துள்ளார். மதத்தின் பெயரால் படுகொலைகள் நாட்டில் நடந்து வரும் நேரத்தில் பிரதமர் வாய் திறக்காமல் இருக்கிறர் என்கின்ற விமர்சனம் வந்து கொண்டிருக்கும் நேரத்தில் பிரதமரின் இந்த அறிவிப்பு வெளியாகி உள்ளது. எனவே பிரதமர் வெறும் அறிவுரை கூறினால் மட்டும் போதாது. வெறுப்பு பிரச்சாரங்களையும், வெறுப்பு கொலைகளையும் செய்பவர்கள் மீது கடுமையான நடவடிக்கை அவர் எடுக்க வேண்டும்.

**ISதீவிரவாதம் வளர் 2003ல் அமெரிக்காவின் படையெடுப்பு தான் முக்கிய காரணம்-டோனி பிளேர்:-** உலகம் இன்று IS தீவிரவாதிகளால்கடுமையான கொடுமைகளை தொடர்ந்து சந்தித்து வருகின்றது. இந்த பூதம் எங்கிருந்து வந்தது? மத்திய கிழக்கு நாடுகளின் மீது அமெரிக்கா நடத்திய ஆயுத தாக்குதல்கள் தான் ISஐ உருவாக்கியது. 2003ஆம் ஆண்டு ஈராக் நாட்டின் மீது அமெரிக்கா தாக்குதல் நடத்தும் போது அமெரிக்காவுடன் இணைந்து நின்ற இங்கிலாந்து பிரதமர் டோனி பிளேர் 12 ஆண்டுகளுக்கு பின்,தற்போது அப்ரூவராக மாறியுள்ளார். 2003ஆம் ஆண்டு அமெரிக்காவின் படையெடுப்பு தான் ISஇன் உருவாக்கத்திற்கு காரணம் என்கின்ற செய்தியில் உண்மை உள்ளது என அவர் தெரிவித்துள்ளார். இந்த தவறுக்காக தற்போது(?) அவர் மன்னிப்பு கேட்டுள்ளார்.

**நேபாளத்தின் முதல் பெண் ஜனாதிபதியாக பித்யா தேவி பண்டாரி தேர்வு:-** பித்யா தேவி பண்டாரி, நேபாளத்தின் முதல் பெண் ஜனாதிபதியாக 28.10.2015 அன்று தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார். 1993ல் மர்மமான முறையில் கார் விபத்தில் பலியான கம்யூனிஸ்ட் கட்சி(UML)ன் தலைவரான மதன் குமார் பண்டாரியின் மனைவியான பித்யா தேவி நேபாள கம்யூனிஸ்ட் கட்சி(UML)யின் துணைத் தலைவர். இதற்கு முன்னர் நேபாள நாட்டின் பாதுகாப்புத்துறை அமைச்சர் உள்ளிட்ட முக்கிய பொறுப்புகளை வகித்தவர்.

வாழ்த்துக்களுடன்,

தோழமையுடன்,

**(A.பாபு ராதாகிருஷ்ணன்)**
**மாநில செயலாளர்**